நாள்.21.01.21 **CC No**.58/2019 அ.சா.3 **ஜீவிதா**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்ட முதல் விசாரணை)**

நான் எலையமுத்தூரில் குடியிருந்து, ஸ்ரீனிவாசா வித்யாலயா பள்ளியில் 12 வகுப்பு படித்துவருகிறேன். கடந்த 18.09.2018 ம் தேதி மாலை 6.15 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். எனது அம்மாவும், அப்பாவும் பால் ஊற்றுவதற்காக ஊறுக்குள் சென்றுவறுதாக சொல்விட்டு சென்றார்கள். ஊறுக்குள் சென்ற பிறகு எனது அம்மாவின் சத்தம் கேட்டு நானும் எனது தாத்தா பழனிச்சாமியும் என்ன என்று பார்க்க சென்றோம். நாங்கள் சென்று பாத்தத போது எனது அப்பா தன்னாச்சிஅப்பன் கோவில் அருகே கீழே வழுந்துகிடந்தார். அப்போது எதிரிகளில் கருப்பனன் வாத்தியார், சபரிநாதன், கார்த்திக்குமார் ஆகியோர்கள் எனது அப்பாவை காலால் உதைத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது சாமியப்பன் எதிர் திசையில் வந்து கொண்டிருந்தார். எனது அப்பா எழுந்து நின்றபோது எதிரி தனசேகரன் உனக்கு இதெல்லாம் பத்தாது என்று சொல்லி கையில் வைத்திருந்த சென்ரிங் கம்பியை கொண்டு எனது அப்பாவின் தலையில் மாறி மாறி அடித்தார். எனது அப்பாவிற்கு தலையில் இரத்தம் வந்தது. எனது அப்பா இடது கையால் தடுக்கும்போது கம்பி அவருடைய இடது மோதிர விரலில் பட்டு காயம் ஏற்பட்டது. மேலும் அதே கம்பியை கொண்டு எனது அப்பாவை மூக்கிலும், மூக்கிற்கு கீழேயும் அடித்ததில் இரத்தம் வந்தது. நான் எனது தாத்தா மற்றும் சாமியப்பன் ஆகியோர்கள் சேர்ந்து எதிரிகளிடம் இருந்து எனது அப்பாவை மீட்டோம். அப்போது எதிரி தனசேகரன் சென்ரிங் கம்பியை காட்டி எனது அப்பாவை பார்த்து இன்றைக்கு நீ தப்பித்துவிட்டாய் என்றைக்காக இருந்தாலும் உன் சாவு என் கையில் என்று மிரட்டினார். பிறகு அங்கிருந்து எதிரிகள் நால்வரும் சென்று விட்டார்கள். பிறகு எனது அப்பாவை நானும் எனது அம்மாவும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு கூட்டு வந்தோம். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும்.